(2023-24-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE 23 UTM 407**

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2025

பி.ஏ. தமிழ் இலக்கியம் — மதிப்பெண்கள் : 75

நான்காம் பருவம் — நேரம் : 3 மணி நேரம்

பகுதி – 3

பொருளிலக்கணம் (அகம் – புறம்)

பகுதி – அ (**10x1=10** மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (K1)

1. ‘குறும்பு’ என்பது எந்த நிலத்திற்குரிய இருப்பிடம்…………
   அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) பாலை
2. களவியல் கூறும் ‘மன்றல்’ என்பது?
   அ) கூட்டம் ஆ) மந்தை இ) திருமணம் ஈ) நறுமணம்
3. “வார் வலந்த துடி விம்ம ஊர் புகல நிரை உய்த்தன்று” என்பது ……….
   அ) பாதீடு ஆ) தலைத்தோற்றம் இ) தந்துநிறை ஈ) பூசன்மாற்று
4. பகைவர் நாட்டிற்குத் தீயிடுவது……..
   அ) உழுபுல வஞ்சி ஆ) மழபுல வஞ்சி இ) கொடை வஞ்சி ஈ) கொற்றை வள்ளை
5. சோதிட நூல் வல்லுனனின் புகழினைக் கூறுவது……..
   அ) அவைய முல்லை ஆ) மூதின் முல்லை இ) கணிவன் முல்லை ஈ) ஏறாண் முல்லை

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** (K2)

6. தலைமகனுக்குரிய நிலைபெற்ற குணங்கள் யாவை?
7. ‘கறைவேற் கன்னி’ – குறிப்புரைக்க.
8. ‘பிள்ளைத் தெளிவு’ என்பது?
9. ‘நூலில்’ - குறிப்புரைக்க.
10. ‘பூவைநிலை’ – குறிப்புரைக்க.

**பகுதி – ஆ** (5 x 5 = 25)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விடையளிக்க. (K3)**

11. அ) களவில் ‘குறியிடம்’ குறித்த நுட்பங்களை எழுதுக.

    (அல்லது)

    ஆ) களவு வெளிப்படாமுன் வரைவு - களவு வெளிப்பட்டப்பின் வரைவு – ஒப்பாய்க.

12. அ) களவில் ‘குறிப்பறிதலின்’ உளவியல் நிலையை விளக்குக.

    (அல்லது)

    ஆ) களவின்போது ‘வன்புறையில்’ வெளிப்படும் தலைவனின் உறுதிநிலையை மதிப்பிடுக.

13. அ) வெட்சியின் ‘செலவு’ - கரந்தையின் ‘அதரிடைச் செலவு’ விளக்கி ஒப்பிடுக.

    (அல்லது)

    ஆ) கரந்தைப் படலத்தின் துறைகள் காட்டும் போர்களக் காட்சிகளை விவரி.

(த.பி.பா.)

14. அ) வஞ்சித்திணையின் 'குறுவஞ்சியில்' இடம்பெறும் குடியோம்பல் நிலையை மதிப்பிடுக.

(அல்லது)

ஆ) தும்பைத்திணை சுட்டும் 'குரவைகள்' குறித்து எழுதுக.

15. அ) வகைத்திணையில் இடம்பெறும் 'பாசறை நிலைகள்' குறித்து விளக்குக.

(அல்லது)

ஆ) பாடாண்திணையைச் சார்ந்த 'விளக்கு நிலைகளின்' பொருண்மைகளைச் சுட்டுக.

**பகுதி – இ** (5 x 8 = 40)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விரிவாக விடையளிக்கவும்.**

**(K4 (Or) K5)**

16. அ) 'இயற்கைப் புணர்ச்சி' மற்றும் 'மெய்யுறுப் புணர்ச்சியில்' வெளிப்படும் உணர்வு நிலைகளைப் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ) களவு மற்றும் கற்புவாழ்வில் 'பிரிவு' நிலையின் ஆக்கத்தையும் தாக்கத்தையும் நம்பியகப்பொருளின் வழிநின்று நிறுவுக.

17. அ) 'பாங்கியற் கூட்டத்தின்' பரிணாமங்களைக் கட்டுரைக்க.

(அல்லது)

ஆ) நம்பியகப்பொருளின் 'களவியல்' நெறிமுறைகளைச் சமகாலக் காதலுடன் ஒப்பாய்க.

18. அ) 'வெட்சிப் போரின்' படிநிலைகளைக் கட்டுரைக்க.

(அல்லது)

ஆ) சமூகவியல் நோக்கில் 'வெட்சி' மற்றும் 'கரந்தைத்' திணைகளை ஆராய்க.

19. அ) "வாடா வஞ்சி தலை மலைந்து கூடார் மண் கொளல் குறித்தன்று" எனும் வஞ்சித்திணையின் கூற்றினை நிறுவுக.

(அல்லது)

ஆ) களப்போரின் நெறிமுறைகளைத் தும்பைத்திணையின் வழிநின்று தருவி.

20. அ) 'முல்லை' என்று முடியும் வாகைத்திணையின் துறைகளையும் அதன் நெறிமைகளையும் தொகுத்துக் கட்டுரைக்க.

(அல்லது)

ஆ) 'ஆற்றுப்படைகள்' மற்றும் 'மங்கலங்கள்' குறித்த பாடாண் திணையின் துறைகளை விரித்துரைக்க.

ETHICAL PAPER

**********